# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை தலைப்பு :

அல் - ஹுஜுராத்:

புறங்கூறுதல்

(பகுதி – 5)

11 October 2019
(12 Safar 1441 AH)


ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**




# AL – Hujurat : Ghibbat (Part 5)

# அல் - ஹுஜுராத்: புறங்கூறுதல் (பகுதி 5)

உலகெங்கிலும் உள்ள தனது சஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினைத் தெரிவித்தபிறகு, **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தஷஹுத், தவ்வுத் மற்றும் சூறா.்.பாத்திஹா ஓதி "கடந்த வார ஜுமுஆ பேருரையின் தொடர்ச்சியை கிப்பத் பாகம் 5" என்ற தலைப்பில் ஜுமுஆ பேருரையியை வழங்கினார்கள்.

அல்ஹம்துலில்லாஹ் கிப்பத் பற்றிய எனது வெள்ளிக்கிழமை பேருரையை நான் தொடர்கிறேன். இது எனது 5 –வது வெள்ளிக்கிழமை பேருரையாகிறது. கிப்பத் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பாடங்களிலும் குறிப்பாக அல்லாஹ்வின் மீதான அன்பு, அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) மீதான அன்பு மற்றும் தீனுல் இஸ்லாமின் செயல் முறைகள் மீதான அன்பு போன்ற இந்த விஷயத்தை நீங்கள் அனைவரும் ஆழமாக புரிந்து கொள்ள நான் அதன் விரிவான விளக்கங்களுக்கு செல்கிறேன்.

கடந்த வெள்ளிக்கிழமை நான் சொன்னது போல அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வுடன் நேரடி தொடர்பு இருந்தது. இந்த அன்பு அல்லாஹ்விடமிருந்து நேரடியாக அவருக்கு வந்தது. அதற்காக அவர் போராட்டத்தை மேற்கொள்ளவில்லை. ஆனால் சாதாரண மக்களை பொறுத்தவரை, அவர்கள் அல்லாஹ்விடமிருந்து நேரடியான அன்பையும், திரு நபி (ஸல்) அவர்களின் அன்பையும் பெறுவது எளிதான காரியமல்ல என்பதால் இறை அன்பைப் பெறுவதற்கு அவர்கள் சிரமப்பட வேண்டும். அதாவது

முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பொதுவாக மக்களுடன் வைத்துள்ள அன்பான உறவுகள் மூலமாகத்தான் இத்தகைய உயரிய அன்பின் நிலையை நமக்குள் நிறுவமுடியும். அது எளிதல்ல.

இந்த இலக்கை அடைய முயற்சிகள் இருக்க வேண்டும். இதற்காக நீங்கள் உங்களின் அன்பு மற்றும் அதில் உள்ள அனைத்து குறைபாடுகளிலும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அந்த பலவீனங்களிலிருந்து விடுபட தேவையான முயற்சிகளை நீங்கள் செய்ய வேண்டும். அதைச் செய்ய, நீங்கள் அதற்கான உயர்வும் ஆர்வத்தையும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய உணர்வும் ஆர்வமும் இல்லாமல், அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் மீதும் எந்த அன்பையும் வைத்துக் கொள்ள இயலாது. உங்கள் உணர்வு குறைவாகவும், பலவீனமாகவும் இருந்தால், நீங்கள் விரும்பும் நபருடனான உங்கள் அன்பும் குறைவாகவே இருக்கும். இது ஒரு இயல்பான நிகழ்வாக இருக்க வேண்டும். பல நேரங்களிலும் இந்த விஷயத்தை நீங்கள் புறக்கணிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் உள்ளார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை நிறுத்துகிறீர்கள். அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கு இவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் மிகவும் அதிகமாக துஆ செய்தபோதிலும் உங்கள் தொழுகை மற்றும் நற்செயல்களில் உங்களுக்கு எந்த சுவையும், உயர்வும் மகிழ்ச்சியும் கிடைக்கவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நீங்கள் துஆ செய்கிறீர்கள். ஆனால் உங்களின் அந்த தூ ஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

இதற்கு ஒரு சாத்தியமான காரணம் என்னவென்றால், துஆ செய்வதற்கான உங்கள் உள் உணர்வும், எண்ணமும் பாழாகிவிட்டது. அதனால்தான் உங்கள் மனம் எப்போதுமே அலைந்து திரிகிறது. மேலும் இவ்வுலக இன்பங்களுடன் இணைந்து, இதுவே சரியானதாக அம்மனம் கருதுகிறது. அவ்வுலக காரியங்களில் நீங்கள் ஈர்க்கப்பட்டு, அதனை மட்டும் நீங்கள் நேசிக்கிறீர்கள். அல்லாஹ்விடம் வைத்திருக்க வேண்டிய அன்பை நீங்கள் மிஞ்சிவிட்டீர்கள். இதனால் அது அல்லாஹ்வின் அன்பை அடைவதற்கோ அல்லது நற்செயல்களைச் செய்வதற்கோ உங்களில் உணர்வை உருவாக்குவதில்லை. உணர்வு சரியாக இல்லாதபோது, அன்பும் சரியாக இருக்காது. அது கற்பனையின் உலகில் மட்டுமே இருக்கும், மேலும் இது ஒரு உரிமைகோரலாக

மட்டுமே இருக்கும். அல்லாஹ்வின் மீதான உங்கள் அன்பு உங்கள் இதயத்தின் ஆழ்ந்த தன்மையிலிருந்து வெளிவராதபோது, உங்கள் துஆக்களும் உங்கள் இதயத்தின் ஆழ்ந்த தன்மையிலிருந்து வெளிவராது. மேலும் உங்கள் பிரார்த்தனைக்கும் எந்த உணர்வும் இருக்காது. அப்பிரார்த்தனைகள் உங்களுக்கு ஒரு சுமை போல இருக்கும் இதனால் சில வினாடிகள் அல்லது சில நிமிடங்களுக்குள் உங்கள பிராத்தனையை முடிக்க உங்கள் மனம் விரைந்து செல்லும்.

**ஆகவே, உங்கள் பிராத்தனைகளில் அந்த உணர்வைப் பெறுவதில் வெற்றி பெற வேண்டுமென்றால், அதாவது பிராத்தனைகள் மீது ஆழ்ந்த ஒரு அன்பை நீங்கள் ஏற்பாடுத்துவதற்கும், அல்லாஹ்வின் மீது ஆழந்த தொடர்பை வைத்துக் கொள்வதற்கும், உங்கள் வேண்டுதல்கள் ஏற்றுக் கொள்வதற்கும் உங்களுக்குள் நீங்கள் ஒரு உயரிய ஆன்மீக சீர்திருத்தத்தை கொண்டு வர வேண்டும்.** நீங்கள் முதலில் அல்லாஹ்வின் மீது ஆழ்ந்த அன்பு வைத்திருக்க வேண்டும். அவ்வாறேயானால் எல்லா வகையான கடினமானவைகளை கடந்து செல்ல அவன் உங்களுக்கு உதவி புரிவான். அவன்மீது நீங்கள் வைத்திருக்கும் அன்பை கண்டறிய அவன் பல வழிகளிலும் உங்களை சோதிப்பான். ஆனால் அத்தகைய சோதனைகளுக்கு முன் நீங்கள் சோர்வடையக் கூடாது. மாறாக அவன் மீதான உங்கள் அன்பை நீங்கள் அதிகரிக்க வேண்டும். மிக அதிகமாக அவனை நேசிக்க வேண்டும். அதில் விரக்தியடையாமல் இருக்க வேண்டும். அல்லாஹ்விடமிருந்துள்ள அத்தகைய சோதனைகள் காரணமாக நீங்கள் உங்கள் தொழுகை, துஆ, திக்ர், திலாவத் குர்-ஆன் மற்றும் பிற நற்செயல்களையும், வழிபாட்டு செயல்களையும் விட்டு வெளியேறக் கூடாது. அவ்வாறேயானால் அல்லாஹ் உங்களில் திருப்தியடைந்து, அவன் உங்களை நேசிப்பான். அத்தகைய நிலையிலான இறை அன்பை நீங்கள் பெற ஏராளமான முயற்சிகள் மற்றும் தியாகங்கள் தேவையாக உள்ளன. அப்போதுதான் உங்கள் தொழுகைகள், துஆக்கள் மற்றும் நற்செயல்கள் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதை நீங்கள் காண்பீர்கள்.

அதைபோல்தான், பல மக்களும் நினைப்பதைப் போல கிப்பத் என்பது ஒரு எளிய விஷயமல்ல. அதை ஏற்கனவே நான் உங்களிடம் கூறியிருந்தேன். அல்லாஹ்வின் மீது உங்கள் உணர்வும் ஆர்வமும் இருக்கும் வரை அல்லாஹ்

தன் அடியார்களைப் பார்க்கும் அன்பின் தோற்றத்தை நீங்கள் பெறாதவரை, இவை அனைத்தும் உங்களிடம் இல்லாதவரை, நீங்கள் செய்கிற ஒவ்வொரு அருவருப்பான காரியவும் என்னவென்று உங்களுக்கு புரிந்துக் கொள்ள ஒருபோதும் முடியாது. அந்நிலையில் நீங்கள் கிப்பத்தில் ஈடுபடும்போது, உங்கள் சகோதரர்களின் மாமிசத்தை நீங்கள் புசித்துக் கொள்கின்றீர்கள், இதனால் அல்லாஹ் உங்களிடமிருந்து தன்னை விலக்கிகொள்கிறான். மேலும் அச்செயலை அவன் கண்டிக்கவும் செய்கிறான். நீங்கள் புறங்கூறுதலில் மூழ்கியிருக்கும்போது, அதன் மீது ஒரு வெறுப்பை நீங்கள் உருவாக்கவில்லை என்றால், இது உங்கள் உணர்வை முற்றிலும் அழிந்துவிட்டது என்பதற்கான அறிகுறியாகும். இது அல்லாஹ் நம் முன் வைத்துள்ள மிக தெளிவான அறிகுறியாகும். இந்த அளவீடு மூலம் நம் இதயத்தின் நிலையை உறுதியாக நமக்கு அளக்க முடிகிறது. எனவே நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ள முடியாவிட்டாலும், நாம் பெறும் முடிவுகளின் வெளிச்சத்தில், இந்த அளவீடு குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்த அளவீடுகளில் பொய் இல்லை. புறங்கூறுதலை தவிர்த்து விடுங்கள், அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுவிடுங்கள். இது நீங்கள் உங்களை சீர்திருத்திக் கொள்வதன் மூலமே அடையமுடியும்.

**இவ்வாறு நீங்கள் அந்த உணர்வையும் ஆர்வத்தையும் உங்களிடம் முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறேயானால் நீங்கள் அல்லாஹ் மீதும், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அன்பைப் பெறுவீர்கள், அதுவாயிலாக உங்கள் அனைவரையும் நேரான பாதையில் வழி நடத்த அல்லாஹ்விடமிருந்து வரும் அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்தும் அன்பைப் பெறுவீர்கள். எனவே, அதற்காக உங்கள் உணர்வை நீங்கள் உயர்த்துங்கள், பிறகு நீங்கள் நற்செயல்களை நேசிப்பீர்கள். மேலும் நீங்கள் தீய மற்றும் பாவசெயல்கள் மீது வெறுப்பையும் வளர்த்துக் கொள்வீர்கள்.**

உங்கள் உணர்வை நீங்கள் உயர்த்தாமலிருந்தால், இந்த திட்டத்துடன் நீங்கள் முன்னேற முடியாது. அதாவது அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்துவதற்கும், அல்லாஹ்வை அடைவதற்கும் இயலாது. கிப்பத் தொடர்பாக, உங்களிடமிருந்து நான் எதிர்பார்க்கும் அடுத்தகட்டம் என்னவென்றால், நீங்கள்

உங்கள் இதயத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும், மேலும் நீங்கள் கிப்பத்தில் ஈடுபடுவதிலிருந்து எவ்வளவு இன்பம் பெறுகிறீர்கள் என்று பார்க்க வேண்டும். இவை அனைத்தையும் ஒரே நேரத்தில் அகற்ற முடியாவிட்டால் கூட, அதனை எந்த அளவு குறைக்கமுடியும் என்பதைபற்றி நீங்கள் சிந்தியுங்கள். அது குறைகிறதா இல்லையா என்பதை நீங்கள் பார்வையிட வேண்டும். புறங்கூறுவதற்கான அந்த உணர்வையும் ஆர்வத்தையும் குறைப்பதில் நீங்கள் வெற்றி பெற்றால், அல்ஹம்துலில்லாஹ், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மேலும் நல்ல ஆன்மீக ஆரோக்கியத்துடன் நீங்கள் இருப்பீர்கள்.

ஆனால் இந்த வலுவான அறிவுரைகளுக்குச் செவிசாய்த்தபின்னும், புறங்கூறுதலில் ஈடுபடுவதை நிறுத்த முடிவு செய்த போதிலும், நீங்கள் தொடர்ந்து அதைச் செய்கிறீர்கள் என்றால், அதைச் செய்வதில் நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள் என்றால், நீங்கள் எந்தவிதமான சீர்திருத்தத்திற்கும் தயாராகவில்லை என பொருள். கிப்பத்திலிருந்துள்ள இணைப்பை துண்டிக்க நீங்கள் அயராது முயற்சித்தீர்கள், தீமையை நோக்கிச் செல்லும் போது, நீங்கள் நல்ல செயல்களைச் செய்ய உங்களை கட்டாயப் படுத்தினீர்கள். ஆனால் இந்த முயற்சிகளில் தொடர்ந்து நீங்கள் ஈடுபட்டவாறு இருக்க வேண்டும். இல்லையேல், ஒரு கட்டத்தில் தீமைகளின், இந்த உந்துதல்கள் மீண்டும் திறக்கப்பட்டு, அது உங்களை மீண்டும் தீமைகளின் பக்கம் அழைத்து செல்லும்.

இவ்வாறு உங்கள் வாழ்க்கையிலிருந்து புறங்கூறுதலைப் பிரித்தெடுப்பதற்கான வழிமுறைகளுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுங்கள். நான் உங்களுக்குக் காட்டியதைப் போல உங்களை ஆழமாக ஆராயுங்கள். ஒரு ஜமாஅத் என்ற வகையில், நாம் கிப்பத்திலிருந்து முற்றிலும் விடுபட்டு விட்டால், நமது சமூதாயம் காப்பாற்றப்படும் என்பதை நீங்கள் நிச்சயமாக மனதில் கொண்டிருக்க வேண்டும். நம்மில் உள்ள அனைத்து பலவீனங்களிலிருந்தும், குறைபாடுகளிலிருந்தும் ஒரே நேரத்தில் தான் நம்மை முற்றிலுமாக விடுவிக்க முடியாவிட்டாலும், அவற்றின் அளவை பெரிதும் குறைப்பதற்காவது நாம் முயற்சிக்க வேண்டும். அவ்வாறேயானால், திருமணங்களின் உலகில் நாம் அன்றாடம் காணும் அனைத்து இழிவான முடிவுகளுக்கு நல்ல முறையிலான தீர்வை காண முடியும். மேலும் இந்த முயற்சி இத்துறையில் ஒரு அசாதாரண நேர்மறையான விளைவை உருவாக்க நமக்கு முடியும்.

இது தொடர்பாக, வீடுகளின் நிலைமையை உங்களுக்கு பாதுகாக் முடியும். தனிப்பட்ட முறையில் எல்லா வீடுகளிலும் என்னால் செல்ல முடியாது. ஆனால் நான் பார்த்த மற்றும் சாட்சியாக இருந்தவற்றிலிருந்து குறிப்பாக என் தாஆவாவின் போது, அல்லாஹ் எனக்குக் காட்டியவற்றிலிருந்து, சில வகையான மக்கள் எவ்வாறு பேசுகிறார்கள் என்பதையும், அவர்களின் வீடுகளில் எவ்வாறு நடந்துக் கொள்கிறார்கள் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். சில சந்தர்பங்களில் தாயும், புதல்விகளும் தங்கள் சகோதரனின் மனைவிக்கு எதிராக புறங்கூற ஒன்றாக அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு மேல், அந்த சகோதரருக்கு எந்த விதமான மரியாதை உணர்வும் இல்லை, மனைவியிடம் தனது கணவன் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்று அவருக்கு தெரியாது. அவர் தனது தாய் மற்று சகோதரிகளுடன் சேர்ந்து தனது மனைவிக்கு எதிராக தீவிரமாக பேசுகிறார். தாயும் மகள்களும் ஒன்றாக சேர்ந்து மருமகளை இழிவுபடுத்துகிறார்கள். அவளை முட்டாள் என்று அழைத்து கணவன் மனைவி இடையே அமைதியின்மை, தவறான புரிதல்கள் மற்றும் பிரச்சினைகளை உருவாக்க முற்படுகிறார்கள்.

இவை அனைத்தும் சுத்தமான கொடுமை, அநீதி, சீர்கேடு மற்றும் புறங்கூறுதலாகும். மேலும் அநீதிகளின் பிற ஆபத்தான வடிவங்களும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஏழையான மருமகள் ஒரு பிழையைச் செய்தால் நீங்கள் அவர்களிடம் உண்மையான அனுதாபம் அடைந்தால், திரு நபி (ஸல்) அவர்களுடனான உங்கள் தொடர்பு காரணமாக நீங்கள் உருவாக்கும் அத்தகைய அனுதாயங்களை மேம்படுத்தி, நீங்கள் அவளுக்கு ஒரு கண்ணாடி போல ஆக வேண்டும். ஆழ்ந்த அன்பால் அவளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறேயானால் அவள் உணரும் வலியை கூட நீங்கள் உணருவீர்கள், அவருடைய சிரமங்களை நீங்கள் உணருவீர்கள். இப்போது நீங்கள் வெறுப்பு, புறங்கூறுதல் மற்றும் சண்டையின் நெருப்பைப் பற்றவைப்பதற்குப் பதிலாக, வீடு ஒரு போர்களம் மற்றும் நரகமாக மாறுவதற்குப் பதிலாக, குழப்பங்கள், தகராறுகள், உடல்தாக்குதல்கள் போன்றவற்றின் மண்டலமாக மாறுவதற்குப் பதிலாக அந்த வீட்டை அமைதியின் புகலிடமாக மாற்ற நீங்கள் முயற்சிப்பீர்கள். இப்பொழுது ஒருவருக்கொருவர் மரியாதை மற்றும் உரிமைகளை மதித்து நடக்கும் ஒரு இடமாக நம் வீடு மாறிவிடும். நம்

வாழ்வும் அமைதியாகவும் சாந்தியாகவும் அமையும். மேலும் ஒருவருக்கொருவர் நல்லுறவைக் கொண்ட இடமாகவும், சண்டை அல்லது தகராறு இல்லாத வீடாகவும் இருக்கும் உங்கள் உன்னத செயலின் மூலம் நீங்கள் கணவன் - மனைவியை அமைதியுடன் வாழ ஊக்குவித்திருப்பீர்கள். மேலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளும் அந்த ஜோடியைச் சூழ்ந்திருக்கும்.

சில நேரங்களில், மருமகள் மாமியாருக்கும் நாத்தியார்களும் எதிராக இருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். அவள் தனது கணவரிடம் மாமியாருக்கு எதிராக எல்லா வகையான கெட்ட காரியங்களையும் சொல்கிறாள். கணவர் இல்லை என்பதை அவள் அறிவாள். அவர் வேலைக்குச் சென்றிருப்பார், இதனால் இரவில் கணவரின் தாய் மற்றும் சகோதரிகளைப் பற்றி எல்லா வகையான பேச்சுக்களையும் அவள் தெரிவிக்கின்றாள். மேலும் தனது கணவரை அவன் குடும்பத்திலிருந்து பிரித்து தனி குடும்பத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அவள் விரும்புகிறாள். கணவர் தனது தாய் மற்றும் சகோதரிகளுடனான அனைத்து உறவுகளையும் முறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தப் பிறகு தான் அவள் ஓய்வு பெறுகிறாள். பின்னர் கணவர் தனது மனைவியின் குடும்பத்தினருடன் மட்டும் உறவை வைத்துக் கொள்ள அவள் விரும்புகிறாள். இவ்வாறு ஒருவருக்கு தவறான புரிதல்களையும் குழப்பங்களையும் உருவாக்க முற்படுபவர்களும், அமைதியை விரும்புவோர்களும் ஒருபோதும் ஒன்றாகச் செல்ல முடியாது.

ஆகவே, குடும்பத்திலோ அல்லது மண வாழ்க்கையிலோ என்ன நடக்கிறது என்பதை நீங்கள் கண்டால், அதன் ஆரம்பமே வெறுப்பை அடிப்படையாகக் கொண்டால், நீங்கள் அல்லாஹ்வினின் பார்வையில் ஒரு வெறுக்கத்தக்க பெரிய பாவத்தை செய்துள்ளீர்கள். **நீங்கள் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்திருக்கிறீர்கள் என்று சொல்வது உண்மையாகயிருந்தால் அந்த சொல் அதாவது அந்த உறுதிமொழி உங்கள் காதுகளில் எதிரொலிக்க வேண்டும். ஏனெனில் ஒரு முஸ்லீம் மற்றொரு முஸ்லீமுக்கு கண்ணாடி போல இருக்க வேண்டும். கடந்த காலத்திலும் நான் கூறியிருந்தேன், ஒரு கண்ணாடி எந்த சத்தத்தையும் ஏற்படுத்தாது. ஒரு நபர் தவறாக உடையணிந்தால், அவரது தலைமுடி நன்றாக சீவாமலிருந்தால், அவர் கண்ணாடியில் தன்னைப் பார்க்கும் போதெல்லாம், கண்ணாடி அவரின்**

குறைபாட்டை மிகவும் அமைதியாக அவரை காண்பிக்கும். இந்த எடுத்துக்காட்டில் நிறைய ஞானங்கள் உள்ளன. ஒரு முஸ்லீம் தன்னைத் திருத்திக்கொண்டு, ஒரு கண்ணாடியைப் போல அமைதியாக மற்றொரு நபரை சீர்திருத்த வேண்டும். மேலும் அவர் தனது பிழையை உணர்ந்து தன்னை சீர்திருத்த அந்த நபரை ஊக்குவிக்க வேண்டும்.

நேரமின்மை காரணமாக நான் இன்று இங்கே இதனை முடித்துக் கொள்கிறேன். இது உண்மையில் மிக விரிவானதும் மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமும் ஆகும். இவ்விஷயத்தில் பல்வேறு அம்சங்கள் உள்ளன. இதனால் இதை தொடரவேண்டும். உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லீம்களின் தர்பியத்துக்கும் பொதுவாக அனைத்து மனிதர்களின் தர்பியத்துக்குமாக இந்த விஷயத்தில் தொடர்ந்து விளக்கமளிக்க அல்லாஹ் எனக்கு தவ்..்பீக் வழங்குவானாக!

இந்த விஷயத்தில், இந்த பேருரைகள் மூலம் சமூகத்தில் பல குடும்ப மற்றும் திருமண பிரச்சினைகள் போன்றவற்றிற்கு தீர்வுகாண முடியட்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். மேலும் உலகத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சமாதானம் நிலைநாட்டப்பட நான் பிரார்த்திக்கிறேன். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Translated by:**

**Naib Amir Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**